ஆனுவல் கிராண்ட் ஆங்கில மொழி போதனா முறையை சொல்லிக் கொடுக்கின்ற அந்த வகுப்புகளுக்கும் கொடுப்பதற்கு மறு பரிசீலனை செய்வார்களா? அரசு விரைவிலே அதிலே முடிவெடுத்து, இந்த ஆண்டே தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கொள்கைக்கு எதிராக ஆங்கில மொழியிலே படிக்க விரும்புகின்றவர்கள் கட்டணம் கொடுத்துத்தான் படிக்க வேண்டுமே தவிர, அவர்களுக்கு அரசு செலவு செய்யும் என்பது சரியான ஒரு கொள்கையாக ஆகாது. ஆகவே, அப்படிப்பட்டவர்கள் கட்டணத்தைக் கொடுத்துப் படிக்கலாம். அரசைப் பொறுத்தமட்டில், எது சரியான கொள்கையோ, அதற்குத்தான் நாம் செலவு செய்ய முடியுமே தவிர, ஒரு தவறான கொள்கைக்கு அரசு செலவு செய்வது என்பது, நாமே ஒன்றைத் தவறு என்று சொல்லிவிட்டு, நாமே ஒன்றைத் தவறு என்று எல்லா இடங்களிலும் பேசிக் கொண்டு, அதற்கு அரசாங்கம் பணம் செலவு செய்து கொண்டிருப்பது என்பது, அது சரியாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 522, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

522—

சங்க இலக்கிய நூல்கள்.

*16991—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்க இலக்கிய நூல்கள் மறுபதிப்பு செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவற்றைப் பதிப்பிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்க இலக்கியங்கள் பல மதிப்புகளைக் கண்டுள்ளன. தனிப்பட்ட அமைப்புகளும், பல்கலைக் கழகங்களிலுள்ள பதிப்புத் துறைகளும், சங்க இலக்கியங்களையும், அவை தொடர்பான நூல்களையும் வெளியிட்டு வருகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகமும், சங்க இலக்கியங்களைப் பதிப்பித்துள்ளது. சங்க இலக்கியங்கள் எவருக்கும் கிடைக்கத்தக்க நிலையில் உள்ளன. சங்க இலக்கியங்கள் மறு பதிப்பு செய்யப் பெறா நிலை இல்லை.

1993 ஏப்ரல் 29]

(ஆ) வினா 'அ'-வுக்குரிய மறுமொழியின் அடிப்படையில், இவ்வினாத் தொடர்பாகக் குறிப்புரை இல்லை.

திரு. கா.பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கங்கள் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்த பின்புதான், அதிலும் குறிப்பாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்த பின்புதான் தமிழுக்கு என்று ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கி அங்கே சங்க இலக்கியங்களைப் புதுப்பித்தும் மற்றும் ஆராய்ச்சி செய்கின்ற முறையிலே இருந்துகொண்டு, வந்துகொண்டிருக்கிறது. இருந்தாலும், சங்க இலக்கிய நூல்களான பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும் பல ஆண்டுகளாக பதிப்பில் இல்லாத காரணத்தினால், பல நூலகங்களிலே அந்தப் பாடல்கள் இல்லாமல் இருக்கின்றன. எனவே, மீண்டும் அரசு அந்தப் பாடல்களை பதிப்பு செய்து அனைத்து நூலகங்களுக்கும் அளிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்க இலக்கியங்களை யார் வேண்டுமானாலும் புதுப்பிக்கலாம். அதற்கு இன்னார்தான் பதிப்பிக்க வேண்டுமென்பதில்லை. ஆகவே, இன்றைய தினம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டு நான் விடை சொல்லியிருக்கின்ற இந்தச் செய்தி பத்திரிகைகளிலே வருமேயானால், ஒரு வேளை சங்க இலக்கியங்களுக்கு நிறைய தேவை இருக்கிறதுபோல இருக்கிறது ; வெளியே கடைகளிலே கிடைக்கவில்லைபோல இருக்கிறது என்பது அந்தப் பதிப்பாளர்களுக்குத் தெரிந்தால், அவர்களில் பல பேர் போட்டி போட்டுக் கொண்டு, உடனடியாகப் பதிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேட்பு மனுச்செய்தவர் அதைத் திரும்பப்பெற்றது குறித்து பேரவை முடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) ஒரு முக்கியமான அறிவிப்பைச் சொல்லி விடுகிறேன்.